24.11.2020
அசல் வழக்கு எண்:453-2008

வா.சா.1 மருதன் சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை தொடர்ச்சி

மு.வ.எண்.453/2008 வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதி மருதன் தகப்பனார் முத்தன் என்ற மூக்கன் 1988ம் வருடம் இறந்து விட்டார் என்றால் சரிதான். 1.6.2017ம் தேதி எங்களது தரப்பில் சாட்சியம் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தின் நகல் எப்போது பெறப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ,12 ஆவணத்தின் நகல் யார் எனக்கு எடுத்து கொடுத்தது என்றால் எனது வழக்கறிஞர் எடுத்து கொடுத்தார். வா.சா.ஆ.12 ஆவணத்தின் நகல் எடுப்பதற்கு எப்போது மனு தாக்கல் செய்யப்பட்டது என்ற விபரம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ,12 ஆவணத்தின் நகல் கோரி 14.02.2019ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து வா.சா.ஆ.12 காலதாமதத்துடன் தாக்கல் செய்வதற்கான காரணம் என்னவென்றால் எங்களது வழக்கறிஞரிடம் ஆவணத்தை கொடுத்து விட்டேன். எனக்கு படிக்க தெரியாததால் எந்த வருடம் ஆவணத்தை வழக்கறிஞரிடம் கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. வழக்கறிஞர் ஆவணத்தை பெற்று கொண்டார். வா.சா.ஆ,12 ஆவணத்தில் எனக்கு கிரையம் கொடுத்த சொத்தை மீண்டும் அண்ணாத்துரை என்ற நபருக்கு விற்பனை செய்ததால் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு கிரையம் கொடுத்த சொத்தை மீண்டும் அண்ணாத்துரை என்ற நபருக்கு விற்பனை செய்த விபரங்கள் பற்றி பிராது மற்றும் எங்களது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையிலும், நிரூபண வாக்கு மூலத்திலும் குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணத்தில் உள்ள விபரத்தை படித்து கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கேட்டு தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ.12 ஆவணத்தில் சுப்பன் மூக்கையா வகையறாவினரிடமிருந்து ஒரு சொத்தும், மூக்கன்

வகையறாவினரிடமிருந்து ஒரு சொத்தும் 09.05.2007ம் தேதி கிரையம் பெற்றதாக சரத்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தை வாதிகளோ, பிரதிவாதிகளோ கிரையம் கொடுத்ததாக சரத்து காட்டப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் எத்தனை இலக்க சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் 2 இலக்க சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. வாதிகளுக்குரிய குடும்ப சொத்துக்கள் கூட்டு சொத்தாக இருந்து வருகின்றது என்றும் வாதிகளுக்குரிய பங்கு சொத்தினை திருப்பி கொடுக்க கடமைபட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 ஆவணம் வருவாய் துறையில் எங்களுக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தி தவறுதலாக பெறப்பட்டது என்றால் சரியல்ல வா.சா.ஆ.12 மற்றும் 13 ஆவணங்கள் எங்களது வழக்கிற்கு எவ்வகையிலும் உதவாது என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த மு.வ.எண்.453-2008 வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் மு.வ.எண்.489-2008 வழக்கில் கோரப்பட்டுள்ள பாகப்பிரிவினை படி தீர்ப்பு வழங்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.